ISSN 2320-589X

# செம்புலம்

பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ்

உரு.30/-

விருட்சம் : 4 நவம்பர் : 2016 விழுது : 16

CHEMPULAM

An International Tamil Research Quarterly Journal



ஆசிரியர்

செம்மூதாய் சதாசிவம்

ISSN 2320-589X

# செம்புலம்

பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ்


விலை உரூ.30/-

CHEMPULAM

An International Tamil Research Quarterly Journal

19/F2, Ruby Residency, Narmatha Street (via), Chandran Nagar, Irumpuliyur, East Tambaram, Chennai - 600 059. Mob. : 94442 00369 / 94443 27963

விருட்சம் : 4 நவம்பர் : 2016 விழுது : 16



ஆசிரியர்

**செம்மூதாய் சதாசிவம்**

இணை ஆசிரியர்

முனைவர் **சு. கௌசல்யாதேவி**

இதழ் ஆக்கம்

kannan's... Kanish graphic மதுரை.

கைபேசி : 96 77 93 77 94


**தொடர்பு முகவரி**

**செம்மூதாய் சதாசிவம்**

19/F2, ரூபி ரெஸிடென்சி,
நர்மதா தெரு (வழி), சந்திரன் நகர்
இரும்புலியூர், கிழக்குத் தாம்பரம்,
சென்னை – 600 059

**கைபேசி : 94442 00369 / 94443 27963**

மின்னஞ்சல் : semmoodhai@gmail.com



"இந்திய சமூகத்தின் சேவையிலேயே நான் முற்றிலும் மூழ்கி இருந்தேன் என்றால், அதற்கு முக்கியமான காரணம், ஆத்மானுபூதியைப் பெற வேண்டும் என்பதில் நான் கொண்டிருந்த ஆர்வம்தான். சேவையின் மூலமே ஆண்டவனை அடைய முடியும் என்பதை அறிந்தேன். ஆகையால் சேவையையே என்னுடைய மதம் ஆக்கிக் கொண்டேன். என் அளவில் சேவை என்றால், அது இந்தியாவுக்குச் செய்யும் சேவையே. ஏனெனில் அது தேடாமலேயே எனக்குக் கிட்டியதோடு, அதற்கான மன இசைவும் என்னிடம் இருந்தது."

*- மகாத்மா காந்தியடிகள்*

ஔவையின் புறப்பாடல்களில் பண்பாட்டுக் கூறுகள் 71
பா. இராஜலெட்சுமி

நல்வழியில் நம்பிக்கைகள் 74
இரா. சங்கரேஸ்வரி

நற்றிணை கூறும் விலங்குகள் 77
ரா. நாகராணி

புத்தெழுச்சிப் பாடல்களின் வகைகள் 80
ஆர்.லிடியா குமாரி ராஜ்

திருவேங்கடக் கலம்பகமும் நம்பியகப்பொருளும் ஓர் ஒப்பீடு 83
கு. கீதா

புதிய தலைமுறை காட்டும் கல்விக்கோட்பாடுகள் 86
வெ. மைதிலி

நற்றிணையில் புலப்பாட்டு உத்திகள் 89
நி. இராதிகா

இளையான்குடி மாறநாயனாரின் விருந்தோம்புதல் பண்பு 92
சி. ஞானமணி

பாரதியார் பாடல்களில் பக்திநெறி 96
முனைவர் செ. முருகநாதன்

மூவேந்தர்களின் போர் பற்றி கூறும் - அகம் 99
முனைவர் க. ஆனந்தி

சங்க இலக்கியத்தில் சமூக வாழ்க்கை 103
கேப்டன் முனைவர் த. மணிவண்ண பாண்டியன்

சமயங்கள் வழியே ஐம்பெருங்காப்பியங்கள் உணர்த்தும் அறம் 106
அ. கல்பனா

அமுதசுரபி இதழ் வெளிப்படுத்தும் கல்விச் சிந்தனைகள் - 2015 109
மூ. சுதா

Scanned with CamScanner

# மூவேந்தர்களின் போர் பற்றி கூறும் - அகம்




## முனைவர் க. ஆனந்தி

உதவிப் பேராசிரியர்,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்.


பழந்தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர்களான மூவேந்தர்களும் அகவாழ்க்கையிலும், புறவாழ்க்கையிலும் சிறந்த புகழுடன் வாழ்ந்தவர்கள். வரலாற்றில் தடம் பதித்தவர்கள். அவர்கள் வீரத்திலும், வலிமையிலும் சிறந்து விளங்கியவர்கள். மூவேந்தர்களும் நாட்டை ஆண்ட போது இயற்கை எழில் கொண்ட நாட்டின் வளமும், செல்வமும் எல்லையற்று இருந்தன. மன்னர்களின் செங்கோன்மை நெறியும், அவர்கள் பின்பற்றிய மரபும், பழக்கவழக்கமும் இன்றும் ஏடுகள் பேசிக் கொண்டுதான் இருக்கின்றன.

இரவலர்களையும், புலவர்களையும் போற்றிப் பாதுகாத்த பாங்கு அவர்களின் பண்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வளவு சிறப்பு பெற்ற மூவேந்தர்களும் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள் என்பதற்கான எந்தவித சான்றுகளும் இல்லை. மாறாக ஒற்றுமையின்றி வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகள் தாம் பெறப்படுகின்றன. இந்த செய்தி ஒரு மன்னனின் ஒழுகலாறுகளைப் பற்றிக் கூறும் புறநூல்களில் அல்லாமல் அகநூலில் காணப்படுவது தான் இங்கு வியக்கத்தக்கது.

### சேரனின் சிறப்பு

சேரர்களை கோதை, மாந்தைக் கோ, குடநாடன், வஞ்சிக்கோ, பூழியர் கோ, கொல்லியர் கோ, வானவன், முசிறியார் கோமான் என்று அவர்களின் குடிப்பெயர்களால் அழைத்துள்ளனர்.

வானுலகிற்கு மண்ணுலகம் ஈடாக விளங்குமளவு, விண்மீன்களுக்கு ஈடான வீரமிக்க மன்னர்கள் அமைந்து சேர நாட்டை ஆண்டுள்ளனர். வானில் விண்மீன்களுக்கு மத்தியில் பொருந்தியுள்ள நிலவை ஒத்திருப்பவன். வானளவு உயப்ந்த கொல்லி மலைக்குரிய மன்னனாகிய சேரன் கோதை என்பவன்.

**“.................... .................. ............. வானத்து**

**மீன்சேர் மதியனையான் விண்ணுயர் கொல்லியர்**

**கோன் சேரன் கோதை யென்பான்”**(முத்தொள்:16)

என்கிறது முத்தொள்ளாயிர வரிகள். சேரனது நாடு, குழைந்த சேறுடைய வயல்களில் சிவந்த ஆம்பல் மலர்கள் மலர்ந்திருக்கும். இந்த காட்சியானது வயல்களில் வெள்ளம் தீப்பற்றிக் கொண்டது என்று அஞ்சிப் பறவைக் கூட்டங்கள்




Scanned with CamScanner

தம் கைகளாகிய சிறகுகளால் தம் குஞ்சுகளை ஒடுக்கிக் கொண்டு ஆரவார ஒலிகளை ஏற்படுத்தும் வளம் நிறைந்த நாடு. இதனை,

**"அள்ளல் பழனத் தரக்காம்பல் வாய்அவிழ**

**வெள்ளந்தீப் பட்டதென வெரிஇப் – புள்ளினம்தம்**

**கைசிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ**

**நச்சிலைவேற் கோக்கோதை நாடு"** (*முத்தொள்:13*)

என்ற வாரிகளால் அறியலாம்.

## சோழனின் ஆட்சி

சோழ மன்னர்களைப் பொதுவாக உறந்தையர் கோன், கோழிக்கோமான், வளவன், செம்பியன், கிள்ளி, நீர்நாடன், புகாஅர்ப் பெருமான், சென்னி, காவிரி நீர் நாடன் என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர்.

உறந்தை எனப்பெறும் உறையூருக்கு மன்னனாகிய சோழன் குளிர்ந்த மலர் மாலையை மார்பில் அணிந்த தமிழர்கட்குரிய தலைவன் என்று முத்தொள்ளாயிரப் பாடல் கூறுகிறது. நல்ல யானையைக் கொண்டு திகழும் சோழனுடைய நாட்டில் அறுவடை செய்த தானியக் குவியல்களை உழவர்கள் பாதுகாவல் செய்வார்கள்.

அவ்வாறு பாதுகாக்கும் போது நெற்களமாகிய இடத்தில் அமைந்த வைக்கோற் போர்களின் மீது ஏறி நின்று "நாவலோ ஓ" என்று கூவி அழைக்கும் அந்தக் காலைநேரத்து ஓசையானது, மன்னன் தன் பகைவரைக் கொல்லவல்ல யானையின் மீது அமர்ந்திருந்து, யமன் கூவியழைப்பது போல் இருந்ததாக கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

**"காவல் உழவர் களத்தகத்துப் போர்ஏறி**

**நாவலோஓ என்றழைக்கும் நாளோதை –**

**காவலன் தன்**

**கொல்யானை மேலிருந்து கூற்றி சைத்தாற்**

**போலுமே**

**நல்யானைக் கோக்கிள்ளி நாடு."** (*முத்தொள்.21*)

சோழனுடைய ஆட்சியை உருவகப் படுத்தும் போது மன்னனுடைய வெண்கொற்றக் குடை, மந்தர மலையைக் குடைக்காம்பாகவும், அழகிய வானத்தை ஓலையாகவும், நிலவை அதற்கு ஒரு நெற்றிப் பொட்டாகவும் கொண்டு கடல் நீரால் முற்றுகையிடப் பெற்றுள்ள உலகம் முழுதும் நிழல் செய்யும் என்று (*முத்.23*) கூறியுள்ளனர்.

## பாண்டியனின் வளமை

பாண்டியர்களை மாக்கடுங்கோன், மாறன், கூடல் கோமான், தென்னன், செழியன், வழுதி, மதுரையார் கோமான், தமிழ்நர் கோமான், கொற்கைக் கோமான், பொதியில் கோமான், சேலேக வண்ணன், வையையார் கோமான், தென்னவன், பஞ்சவர் என்பது அவர்தம் குடிப்பெயர்கள் ஆகும்.

பாண்டியன் ஆட்சி செய்கிற மதுரை நகரம் ஒளி பொருந்திய முத்துகள் விளையும் நாடு. அதன் கண் சங்கின் முதிராத முட்டைகளும் குவிந்த புன்னை அரும்புகளும், பந்தலைப் போன்று பரவியிருக்கும் இளம்பாக்கு மரங்களின் பாளைகளும் தரையில் சிந்தி விளங்கும் காட்சி முத்துக்களைப் போன்று தோன்றும் அழகான தன்மையுடையது. (*முத்.88*)

பாண்டிய நாட்டின் மண்ணுக்குள் செம்பொன் அகப்படும். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் நூல்கள் ஊர்களில் அகப்படும். வெண்சங்குகளும் முத்துக்களும் தூய நீருள் அகப்படும். மலைச்சாரல்களில் யானைகள் கிடைக்கும். மாலையணிந்த பகை வேந்தர்களின் மார்பகங்களில் வலிமை மிக்க பாண்டிய மன்னர்களுடைய கூரிய வேலின் நுனி படும் என்று முத்தொள்ளாயிரம் குறிப்பிடுகிறது.

**"பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ் நூல்**

**நீர்படுப வெண்சங்கும் நித்திலமும் – சாரல்**

**மலைபடுப யானை வயமாறன் கூர்வேல்**

**தலைபடுப தார்வேந்தர் மார்பு."**

எனும் பாடல் வரிகள் மூலம் அறியப்படுகிறது.

சேர, சோழ, பாண்டியர்கள் தங்களது வீரத்திலும், செல்வத்திலும், படைபலத்திலும், நாட்டின் வளத்திலும் மிகவும் சிறந்து விளங்கினார்கள் என்று அகமும், புறமும் கலந்து



Scanned with CamScanner

இருக்கும் சிற்றிலக்கியமான முத்தொள்ளாயிரம் எடுத்துக்காட்டியுள்ளது.

இருப்பினும், எட்டுத்தொகையில் சிறந்து விளங்கும் அகநானூறு தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்கிறது. ஒரு அகநூல் தலைவன், தலைவி, தோழி என்பதோடு மட்டுமல்லாது மன்னர்களின் புறவாழ்க்கையை சான்றாக எடுத்துக் காட்டியுள்ளது. அந்த வகையில் நல்லதொரு தலைவனாகவும், மன்னனாகவும் வாழ்ந்த சேர, சோழ, பாண்டியர்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி வாழ்ந்துள்ளனர் என்பதற்கு அகம் சான்று பகர்கிறது.

## மூவேந்தர்களின் தலைநகரம்

தலைவியை பிரிந்து பொருளீட்டச் சென்று மீண்டு வரும் தலைவன் பாலைத் திணையில் தன் நெஞ்சுக்கு உரைக்கின்றான். பொருளீட்டுதலின் சிறப்பும், அதனைக் கொண்டு உற்றார் உறவினர்களைப் பேணிக் காக்கும் பண்பும் தலைவனுக்குரியது. இதனை, ஆத்திமாலை சூடிய வீரம் மிக்க சோழ மன்னர்களின் அறம் விளங்கும் அவையையுடைய உறையூரைப் போன்று, பெறுவதற்கு அரிய சிறப்புகளையுடைய பொருளை ஈட்டிச் சிறப்பு பெறல் வேண்டும்.

**"ஆரங்கண்ணி அடுபோர்ச் சோழர்**

**ஆறங்கெழு நல்அவை உறந்தை அன்ன"**

(அகம் 93:4-5)

இங்ஙனம் சோழர்களின் தலைநகரமாக உறந்தை விளங்கியுள்ளது.

பொருளை ஈட்டி வரும் தலைவன் பகைவர்களை வென்று வேப்பம்பூ மாலை அணிந்திருக்கும் பாண்டியனின் வளமை மிகும் மதுரை நகரின் மணம் வீசும் கடைவீதிகள் போல அழகிய தோற்றம் கொண்ட நறுமணம் வீசும் தலைவியை அடைவோம் என்கிறான் தலைவன்.

**"வாடா வேம்பின் வழுதி கூடல்"** (அகம் 93:9)

வாடாத வேப்பம்பூ மாலை அணிந்திருக்கும் வழுதி (பாண்டியன்)யின் தலைநகரம் கூடல் நகரம் (மதுரை).

யானைப் படையும், தேர்ப்படையும் உடையவன் சேரன். அவனுடைய செல்வம் கொழிக்கும் தலைநகரம் கருவூர் என்பதனை,

**"கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை**

**திருமா வியன்நகர்க் கருவூர் முன்துறை"**

(அகம் 93:19-20)

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. இங்ஙனம் சோழர், பாண்டியர், சேரர் முறையே உறந்தை, கூடல், கருவூர் ஆகியன தலைநகராக இருந்துள்ளது என்பது உறுதி.

## மூவேந்தர்களும், போரும்

கரிகால மன்னனோடு போர் செய்த பெருஞ்சேரலாதன் வெண்ணிப் போர்க்களத்தில் புறப்புண் பட்டமைக்காக நாணித் தன்னுடைய வாளோடு வடக்கிருந்து உயிர்த்துறந்தான்.

**"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்**

**பொருதுபுண் நாணிய சேரலாதன்"** (அகம் 55:9-10)

சோழனும், சேரனும் போரிட்டு சோழன் வெற்றி கொண்டுள்ளான் என்பது தெரிகிறது.

அதை என்பவளின் தந்தையான, போரில் வல்ல சோழன் பருவூர் என்னும் போர்க்களத்தில் போரிட்டான். அவனை எதிர்த்த இரு பெரும் வேந்தர்களான சேர, பாண்டியர்களை போர்க் களத்தில் மாண்டனர்.

**"அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்,**

**வெண்ணெல் வைப்பின் பருவூர்ப் பறந்தலை**

**இரு பெரு வேந்தரும் பொருதுகளத்து ஒழிய"**

(அகம் 96:13-15)

சோழனோடு போரிட்டு சேரனும், பாண்டியனும் மாண்டனர்.

பெரும்புகழ் கொண்ட கரிகால் வளவன் வெண்ணி என்னும் இடத்தில் வீரமுரசுகள் முழங்கப் பதினொரு வேளிர்களுடன் இருபெரும் வேந்தர்களும் வலிமை இழந்து தோற்று ஓடுமாறு போர் செய்து வீழ்த்தினான்.

**"காய்சின மொய்ம்பின் பெரும் பெயர்க் கரிகால்**



Scanned with CamScanner

ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழ் இசை முரசம் பொருகளத்து ஒழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய"

(அகம் 246:8-12)

என்னும் பாடல் வரிகள் பல நாட்கள் பேர் நடந்தேறியுள்ளது என்பதனைச் சுட்டுகிறது. அதனோடு சோழன் (கரிகாலன்) வெண்ணிப் பறந்தலையில் 11 வேளிர்களை மட்டுமல்ல சேர, பாண்டியனையும் வீழ்த்தியுள்ளான் என்பது தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருஞ்சேனையோடு வேற்றுப் புலத்தே தங்கியிருந்த கிள்ளிவளவன் என்பவன் நீண்ட தேரினையும், யானைப்படையும் உடைய மாறன் என்பவனைப் போரில் வெற்றி கொண்டு அவனுடைய குதிரைகளையும், யானைகளையும், ஊர்களையும் கைப்பற்றினான். இதனை அறிந்த கோதைமார்பன் என்னும் சேரமன்னன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான்.

".............. .................. ................. நெந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர் கொளக்
கோதை மார்பன் உவகையின் பெரிதே"

(அகம் 346:18-25)

இப்பாடல் வழி சோழன் பாண்டியனின் இடத்திற்கே சென்று பாண்டியனை வெற்றி கொண்டுள்ளான் பாண்டியன் தோற்ற செய்தி கேட்டு சேரன் மகிழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

சோழன் மட்டுமே வெற்றி கொண்டதாக இல்லை. சில நேரங்களில் பாண்டியனும் வெற்றி கொண்டுள்ளான். சோழனும், சேரனும் வீழ்ந்திருக்கின்றனர்.

"மை அணி யானை மறப்போர்ச் செழியன்
பொய்யா விழவின் கூடற் பறந்தலை
உடன் இயைந்து எழுந்த இருபெரு வேந்தர்"

(அகம்.116:13-16)

வீரம் மிக்க பாண்டிய மன்னன் போர் செய்வதில் வல்லவன், அவனுடைய யானைகள் மதுரையின் போர்களத்தில் எழுந்ததும், அப்பாண்டியனை எதிர்த்து நின்ற இருபெரும் வேந்தர்களான சேரனும், சோழனும் புறமுதுகிட்டு ஓடுமாறு பாண்டியன் போர் செய்துள்ளான்.

மற்றொரு இடமான சுள்ளி என்னும் பேரியாறு சேரமன்னர்க்கு உரியதாக இருந்தது. அவ்விடத்தில் வெண்மையான நுரை சிதறுமாறு மரக்கலம் செலுத்தி யவனர்கள் கொண்டு வந்த பொன்னை விலையாகக் கொடுத்து மிளகை வாங்கிச் செல்வர். அத்தகு வளம் நிறைந்த முசிறி என்னும் பட்டினத்தைப் பாண்டிய மன்னன் தன்னுடைய யானைப் படைகளின் ஆற்றலால் வளைத்துப் போரிட்டு வெற்றி கண்டான்.

"................ ............................ ............... சேரலர்
சுள்ளி அம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளர் கெழு முசிறி ஆர்ப்பு எழ வளைஇ
அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்"

(அகம் 149:7-13)

பாண்டிய மன்னன் சேர மன்னனோடு தனித்துப் போரிட்டுள்ளான்.

## முடிவுரை

அன்றைய காலகட்டத்தில் நாட்டை விரிவுபடுத்த எண்ணிய மூவேந்தர்களும் போரிலும், வீரத்திலும், வலிமையிலும், படைத் திறனிலும் மிகவும் சிறந்து விளங்கியுள்ளனர். ஆனால் இவர்கள் மூவரும் கொஞ்சம் விட்டுக்கொடுத்து ஒற்றுமையுடன் இருந்திருந்தால் இந்தியா முழுவதுமே தமிழகம் என்றுதான் அழைத்திருக்க முடியும். அந்நியர்கள் புக வாய்ப்பு இருந்திருக்க இயலாது. தமிழகம் குறுகிய வட்டத்திற்குள் இருந்திருக்காது.



Scanned with CamScanner

Owned and published by Dr. S. Sathasivam from, No.17, Tagore Street,
MMDA Nagar, Chitlapakkam, Chennai - 600 064. and printed by R.Venkatesan at
Anbu Achakam, 22/12, South Mada Street, Chinna Kancheepuram - 631 501.
Editor - Dr. S. Sathasivam



Scanned with CamScanner